ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/10 - 2015 මාර්තු මස 23 වැනි සඳුදා - 2015.03.23

*1907/10 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (விசேட வகுதிகளின் பிணக்குகள்) சட்டம்***

*8 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (விசேட வகுதிகளின் பிணக்குகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நீதி, தொழில் உறவுகள் அமைச்சராக எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 1904/41 ஆம் இலக்க 2015, மாச்சு 04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின்மூலம் காட்டப்பட்டுள்ள விசேட மத்தியஸ்த சபைகளுக்குள் முழுமையாக அல்லது பகுதியொன்றாக எழுகின்ற விடயப் பொருளின் நிதிப் பெறுமதி 1901/8 ஆம் இலக்க 2015.02.10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற பிணக்குகள் வகுதிகளைச் சேர்ந்த பிணக்கொன்று தொடர்பில் 2,000,000 ரூபாவுக்குக் குறைவாக இருக்க வேண்டுமென இக்கட்டளையின் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,*
*சனாதிபதி சட்டத்தரணி,*
*நீதி, தொழில் உறவுகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2015, மாச்சு 19*

*4- 233/1*

## *2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (விசேட வகுதிகளின் பிணக்குகள்) சட்டம்*

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (விசேட வகுதிகளின் பிணக்குகள்) சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படற்பாலதான 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, தொழில் உறவுகள் அமைச்சரினால் செய்யப்படுகின்ற ஒழுங்குவிதிகள்.*

*கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,*
*சனாதிபதி சட்டத்தரணி,*
*நீதி, தொழில் உறவுகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2015, மாச்சு 19*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் .............. ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் (மத்தியஸ்தர்களின் தகைமைகள்) ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படும்.

*2. 1904/41* ஆம் இலக்க, 2015.03.04 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் குறிப்பிடப்படுகின்ற விசேட மத்தியஸ்த சபைகளின் மத்தியஸ்தர்கள் குழாமொன்றின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு தகைமைகளைப் பெறுகின்ற ஆளொருவர் 35 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 70 வயதுக்குக் குறைந்த மற்றும் ;

(அ) ஏதேனுமொரு எழுத்திலான சட்டமொன்றின் மூலம் அல்லது ஏதேனுமொரு எழுத்திலான சட்டமொன்றின் கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தொழிற்றகைமைகளைக் கொண்டுள்ள ;

(ஆ) அரசாங்க சேவையின் உத்தியோகத்தர் ஒருவராக சேவை செய்துள்ள அல்லது சேவை செய்து கொண்டிருக்கும் ஆளொருவராக இருத்தல் வேண்டும் .

*4- 233/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.